வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=




ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 27.01.2025 திங்கட்கிழமை இதழ் : 27 பக்கங்கள் : 12

# இந்தியா இலங்கையின் நம்பிக்கைக்குரிய சகா!

## குடியரசுத் தின நிகழ்வில் இந்திய பதில் தூதுவர்


கொழும்பு, ஜனவரி 27

**"இலங்கையின் நம்பகத்தன்மை மிக்க நண்பர்-சகா என்பதை மீண்டும் மீண்டும் இந்தியா நிரூபித்துள்ளது" என குறிப்பிட்ட இலங்கைக்கான இந்திய பதில் துதுவர் சத்யாஞ்சல் பாண்டே, "நமது கதைகள் பின்னிப்பிணைந் துள்ளன. நம் எதிர்காலம் ஒன்றோடு ஒன்று இணைக் கப்பட்டது" என கூறினார்.**



இந்தியாவின் 76ஆவது குடியரசு தின நிகழ்வில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை இந்தியாவின் ஒரு முக்கிய பங்காளியாக உள் ளது. இந்தியாவும் இலங்கை யும் சக ஜனநாயக நாடுகள் மாத்திரமல்ல. நாங்கள் நமது பன்முகத்தன்மை 11



## ஓமந்தையில் தடம்புரண்டது ரயில்!

வவுனியா, ஜன. 27

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் புறப்பட்ட ரயில் ஓமந்தை பகுதியில் மாலை 4:30 மணியளவில் தடம் புரண்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி ரயில் ஓமந்தை பகுதியில் சென்று கொண்டிருக்கையில் கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த ரயில் வருகை தந்தபோது அடுத்த தடத்துக்கு மாற்றியபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இரண்டு ரயில் பெட்டிகள் வழித் தடத்திலிருந்து கீழே இறங்கியுள்ளதுடன் தண்டவாளத் துக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

இதேவேளை, கொழும்பு நோக்கிச் செல்ல 11

## கடந்த கால குற்றச் செயல்கள் குறித்து அரசியல் தலையீடின்றி விசாரணைகள்!

கொழும்பு, ஜன. 27

வசீம் தாஜுதீன் கொலை, லசந்த விக்ரம துங்க கொலை, ஊடக வியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட கடந்த காலத்தில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பான முடிக்கப்படாத விசாரணைகளை மீள தொடங்கியுள்ளதாகவும் அவற்றை எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் இன்றி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதாகவும் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

சில விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும், இவை சட்டமா அதிபர் திணைக் களத்துக்கு அனுப்பப்பட் டுள்ள தாகவும் தெரிவித்த அமைச்சர், கடந்த காலங் களில் நடந்த அனைத்து குற்றங்கள் குறித் தும் விசாரணை களைத் தொடங்கி 11

## 2 ஜனாதிபதி மாளிகைகள் மட்டுமே அரச தேவைக்கு பயன்படுத்தப்படும்

கொழும்பு, ஜன. 27

கொழும்பு மற்றும் கண்டியில் காணப்படும் இரு ஜனாதிபதி மாளிகை களை தவிர்த்து அனைத்து ஜனாதிபதி மாளிகைகளை யும் ஏனைய நோக்கங்க ளுக்காக பயன்படுத்த அர சாங்கம் தீர்மானித்துள் ளது.

அவற்றை ஹோட்டல் கள் அல்லது கல்வி நிறு வனங்களுக்காக வழங்க நடவடிக்கைகள் மேற் கொள்வதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அதன்படி, அவற்றின் இருப்பிடம் மற்றும் பொருத்தத்தின் அடிப் படையில் அவை எந்த நோக்கத்திற்கு ஏற்றவை என்பதை அரசாங்கம் மிக விரைவில் தீர்மானிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் அமைச் சரவையின் தீர்மானத் தின்படி, பொது நிர் வாக அமைச்சகம் 11

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் சந்திப்பு மீளவும் ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 27

புதிய அரசியலமைப்பு மற்றும் இனப்பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் பாராளுமன்றில் கூட்டாக செயற்படுவது தொடர்பில் தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிகளுக்கு இடையே இன்று நடைபெறவிருந்த கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.

ஏலவே இந்த சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற விருந்த நிலையில் அது இன்று வரை ஒத்தி வைக்கப்பட் டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாரா ளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் 11

## யாழ். வருகிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க எதிர்வரும் வெள் ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது யாழ். மாவட்ட செயலகத்தில் விசேட மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் பங்கேற்க வுள்ளார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அங்கத்தவர்களுடனான சந்திப்பொன்றிலும் அவர் பங்கேற்கவுள்ளார் என தகவல்கள் கூறுகின்றன.

இதனை விடவும், தென்மராட்சியில் ஆலய 11

## எதிர்வரும் பெப். 4ஆம் திகதி கிளிநொச்சியில் போராட்டம்

### காணாமற்போனோரின் உறவுகள் நடத்துவர்

கிளிநொச்சி, ஜன. 27

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி கிளிநொச்சியில் மாபெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ள தாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங் கத்தினர் தெரிவித்துள்ளனர்.

உறவுகளின் போராட்டம் நீர்த்து விடக்கூடாது என் பதற்காக போராட்டத்தை தாங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்வோம் என வலிந்து காணாமல் ஆக் கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர். 11

## யோஷித ராஜபக்ஷ கைதை பொலிஸ் படம் பிடிக்கவில்லை

கொழும்பு, ஜன. 27

சமூக ஊடகங்களில் தற்போது பரவி வரும் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டிருந்தபோது எடுக்கப் பட்ட புகைப்படம் குற்றப் புலனாய்வுப் பிரிவிலோ அல்லது ஒரு பொலிஸ் அதிகாரியினாலோ எடுக்கப்பட வில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள் ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர், பெலியத்த 11

## யாழ். பல்கலை கலைப்பீட பீடாதிபதி பதவி துறப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 27

கடந்த 24ஆம், 25 ஆம் திகதி நடைபெற்ற யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த உண் ணாவிரதப் போராட்டத்தை அடுத்து யாழ். பல்கலைக் கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 24ஆம், 25 ஆம் திகதிகளில் நான்கு அம்ச கோரிக்கை களை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத் தில் ஈடுபட்டனர். 11

## அரசு ஊழியருக்கு நியாயமான அடிப்படைச் சம்பள அதிகரிப்பு

### ஜனாதிபதி அநுரகுமார உறுதி

கொழும்பு, ஜன. 27

அரசு ஊழியர்களுக்கு நியாயமான அடிப்படைச் சம் பள அதிகரிப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற அனுராதபுர மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித் தார்.

அரச ஊழியர்களுக்கான நியாயமான அடிப் படைச் சம்பள அதிகரிப்பு மற்றும் ஒய்வூதியம் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் - சஜித் இணைவு காலத்தின் கட்டாயம்!

## முழு மனதோடு வரவேற்போம் என்கிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, ஜன. 27

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவது காலத்தின் கட்டாயமாக உள்ள நிலையில், இரு தரப்பும் இணையும் பட்சத்தில் நாம் முழுமனதோடு வரவேற்போம் என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ரணில்,சஜித் ஆகியோரை இணைப்பது குறித்து தீவிரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக்கட்சியான முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியையும், எமது கூட்டணியின் பிரதான கட்சியான சஜித் பிரேமதாஸ ஐக்கிய மக்கள் சக்தியையும் இணைப்பதற்கான நடவடிக்கைகளை நானும், மனோ கணேசனும் ஏலவே முன்னெடுத்திருந்தோம்.

இதற்காக அவர்களிடத்தில் பல்வேறு சந்திப்புக்களை நடத்தியிருந்ததோடு இணைந்து செயற்பட வேண்டியமைக்கான காரணத்தினையும் எடுத்துக் கூறியிருந்தோம்.

எனினும் கடந்த காலங்களில் இரு தலைவர்கள் மத்தியிலும் காணப்பட்ட தலைமைத்துவம் உள்ளிட்ட சில முக்கிய விடயங்களில் விட்டுக்கொடுப்பற்ற நிலைமையால் அந்த முயற்சிகள் கைகூட முடியாது போயிருந்தது.

ஆனால், தற்போது, ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களின் கிடைத்த பெறுபேறுகளை அடுத்து இரு தலைவர்களுக்கும் ஏற்பட்டுள்ள ஞானோதயம் அவர்கள் இணைந்து செயற்படுவதற்கான கட்டாயத்தை உணர்த்தியுள்ளது.

ஆகவே, இரு தரப்பினரும் இணைந்து செயற்படுவதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுவதற்கு இரு தரப்பு அரசியல் கட்சிகளினதும் உயர்மட்டக் குழுக்களை நியமித்துள்ளன.

ஆதனடிப்படையில் எதிர்காலத்தில் பேச்சுக்களை முன்னெடுத்து இரு தரப்பினரும் இணைந்து செயற்படுகின்ற போது அதனை நாம் முழுமையாக வரவேற்பதோடு அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு தயாராகவே உள்ளோம்.

அடுத்துவருகின்ற தேர்தல்களை கையாள்வதற்கு இவ்விரு கட்சிகளும் இணைந்து வியூகத்துடன் செயற்பட வேண்டியது மிகவும் அவசியம் என்பது எமது நிலைப்பாடாக உள்ளது -என்றார். (அ)

# தூக்கில் போடப்பட்ட நாய்!

## மாங்குளத்தில் பரபரப்பு

முல்லைத்தீவு, ஜன. 27

மாங்குளம் பகுதியில் நாய் ஒன்று தூக்கில் போடப்பட்டமையால் பரபரப்பு ஏற்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பகுதியில், பக்கத்து வீட்டு நாய் கடித்ததில் ஒரு பெண்ணின் ஆடு உயிரிழந்துள்ளது. இதனால், இரு தரப்பினருக்குமிடையே பிணக்கு ஏற்பட்டு ஆட்டின் உரிமையாளரான பெண், நேற்று முன்தினம் இணக்க சபையில் முறைப்பாடு கொடுத்துள்ளார்.

இணக்க சபையில் விசாரணை நடத்தப்பட்டபோது, நாயின் உரிமையாளர் மிகவும் வறுமைக்கோட்டில் வாழும் பெண் என்பதால், அவர் சேதத்துக்கான நட்டஈடு வழங்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆட்டின் உரிமையாளரான பெண், குறித்த நாயை தன்னிடம் வழங்கும்படி கோரிக்கை விடுத்தார்.

இணக்க சபையின் பரிந்துரையை ஏற்று நாயின் உரிமையாளர் நாயை ஆட்டின் உரிமையாளருக்கு ஒப்படைத்தார்.

அதன்பின், பரபரப்பை ஏற்படுத்தும் வகையில் ஆட்டின் உரிமையாளரான பெண் குறித்த அந்த நாயை வளர்க்காமல் அதை தூக்கில் போட்டு கொலை செய்துள்ளார்.

இந்த சம்பவத்தை நாயின் உரிமையாளர் படம் எடுத்து சமூகத்திற்கு வெளியிட்டுள்ளார். இதனால் மாங்குளம் பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. (அ)

# 100 மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்க கோரி கீர்த்தி தென்னக்கோன் அமைச்சருக்கு கடிதம்!

கொழும்பு, ஜன. 27

நூறு மில்லியன் ரூபாய் இழப்பீடு கோரி முன்னாள் ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் சமந்த வித்யாரத்னவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி செய்தியாளர் சந்திப்பின்போது வெளியிடப்பட்ட 15 அவதூறான, பொய்யான மற்றும் தவறாக வழிநடத்தும் அறிக்கைகளை வெளியிட்டமை தொடர்பாக முன்னாள் ஆளுநரின் சட்டத்தரணிகள் ஊடாக இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்தல், கடத்தல்காரர் என்று மீண்டும் மீண்டும் கூறியமை, அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை மேற்கொண்டமை, நிலங்களை விற்றமை மற்றும் அரசுக்கு உரித்தான மாமர கன்றுகளை விற்பனை செய்தமை உள்ளிட்ட 15 பொய்யான குற்றச்சாட்டுகளை அமைச்சர் சமந்த வித்யாரத்ன தமக்கு எதிராக முன்வைத்ததாக அந்த கடிதத்தில் முன்னாள் ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தவறானவை மற்றும் உண்மைக்குப் புறம்பானவை என்றும், முன்னாள் ஆளுநருக்கு கௌரவத்துக்கு களங்கம் ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டவை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக முன்னாள் ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோனுக்கு 100 மில்லியன் ரூபாவினை அமைச்சர் சமந்த வித்யாரத்ன நட்டஈடாக செலுத்தவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (அ)

# பலாலியில் இந்திய அமைதிப்படை நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், ஜன. 27

இந்தியாவின் 76வது குடியரசு தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை பலாலியில் உள்ள இந்திய அமைதிப்படையினரின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்திய உதவித் தூதுவர் சாய் முரளி, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் யஹம்பத் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1987ஆம் ஆண்டு முதல் 90ஆம் ஆண்டு வரையிலான கால பகுதியில் அமைதிப்படை எனும் பெயரில் இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்தனர்.

அக்கால பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின்போது, உயிரிழந்த இந்திய இராணுவத்தினரின் நினைவிடம் பலாலி இராணுவ தலைமையகம் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளது. அங்கு சென்றே இந்திய துணைத்தூதுவர் தலைமையிலான இந்திய தூதரக அதிகாரிகள் அஞ்சலி செலுத்தினர். (அ-05)

# இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பொருளாதார உச்சி மாநாடு நாளை!

கொழும்பு, ஜன. 27

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டின் கீழ் பொருளாதார உச்சி மாநாடு நாளை கொழும்பில் நடைபெறவுள்ளது.

"இலங்கையின் எதிர்காலத்தின் வடிவமைத்தல், சிறந்த பொருளாதாரக் கொள்கைகளில் வேரூன்றிய மாற்றத்தின் வளர்ச்சி" என்ற தொனிப் பொருளிலான இந்த உச்சி மாநாட்டை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆரம்பித்து வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, நிலையான பொருளாதார அபிவிருத்திக்கான தொலைநோக்குப் பார்வை குறித்து ஜனாதிபதி, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவார் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தவிர இலங்கையின் டிஜிற்றல் பொருளாதார வழித்தடத்தின் வரைபடத்தை வடிவமைத்தல் குறித்தும் நிபுணத்துவமான முறையில் கலந்துரையாடல் நடைபெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் டிஜிற்றல் முறைமையை முன்னேற்றுவதற்கு பிரயோகிக்கப்பட வேண்டிய யுக்திகள் குறித்தும் கவனம் செலுத்தப்படும் எனவும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அரசாங்க நிறுவனங்கள் பலவற்றில் மொழி பெயர்ப்பாளர் பற்றாக்குறை

கொழும்பு, ஜன. 27

பல அரச நிறுவனங்களில் மொழிக் கொள்கையை கையாள முடியாமல் போயுள்ளதாக இலங்கை மொழி பெயர்ப்பு சேவைகள் சங்கத்தின் செயலாளர் சுஜித். எஸ். அமரசிங்க தெரிவித்தார்.

அரசகரும மொழிகள் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளர்கள் தட்டுப்பாடு காரணமாக இந்த நிலை உருவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது நாடளாவிய ரீதியில் 295 மொழிபெயர்ப்பாளர்கள் மாத்திரமே காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அரச சேவையிலும் தற்போது சிங்கள - தமிழ் மற்றும் தமிழ் - சிங்கள மொழி பெயர்ப்பை மேற்கொள்ளும் 35 அதிகாரிகள் மாத்திரமே என அவர் தெரிவித்தார்.

சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சுமார் 700 மொழிபெயர்ப்பாளர்கள் காணப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அரச மொழி சிங்களம், தமிழ் ஆக காணப்பட்டாலும் கூட இதுவரையில் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் சிங்களம், தமிழ் மொழி பெயர்ப்பு இளங்கலை பட்டம் கூட இல்லையென அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகள் சேகரிக்கப்படுவதற்கும் மொழி பெயர்ப்பாளர்கள் பற்றாக்குறையே காரணம் எனவும் அவர் கூறினார். (அ)

# வெள்ளத்தினால் அழிவடைந்த வயல் நிலங்களுக்கு இழப்பீடு!

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 27

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குரிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் மக்கள் தொடர்பகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் தொடர்பகம் திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து கலந்துரையாடல்களும், மக்கள் குறைகேள் சந்திப்புக்களும் இடம்பெற்றன.

குறித்த மக்கள் தொடர்பக மானது வார நாட்களில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மக்களின் குறைகளைக் கேட்டறிவதற்காக திறந்திருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.01.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், தை 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தேங்காய் நெருக்கடி

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரசியல் விடயங்களை, வெளிவிவகாரக் கொள்கையை எவ்வாறு கையாளும் என்பதெல்லாம் - எதிரணி அரசியல்வாதிகளினதும் புத்திஜிவிகளினதும் பிரச்னையாகும் - ஆனால், சாதாரண மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் எதிர்பாரப்போ வேறு - தமிழ் மக்களின் கரிசனையும் அதுதான் - ஏனெனில் நாட்டில் பொதுவான அன்றாட வாழ்வாதார பிரச்சினைகள் என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவானது. தமிழ் மக்கள் பொருளாதார விடயத்தை நோக்கவில்லை அவர்கள் அரசியல் தீர்வு தொடர்பிலும், நீதி தொடர்பிலும்தான் சிந்திக்கின்றனர் என்பதெல்லாம் சாதாரண மக்களுக்கு வெளியிலிருப்போரின் வாதங்கள் மட்டுமே.

அநுரகுமார திஸநாயக்க அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தவர்கள் சாதாரண மக்களாவர். தேசிய மக்கள் சக்தியும் தாங்கள் சாதாரண மக்களின் பிள்ளைகள் என்றுதான் தங்களை அடையாளப்படுத்துகின்றனர். இந்த நிலையில் சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கு சாதாரண மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்னை புரியாமல் இருக்க முடியாதல்லவா!

தேங்காய் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துச் செல்கின்றது. தற்போதைய நிலையில் முந்நூறு ரூபா வரையில் சென்றாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அதேவேளை, அரிசி தட்டுப்பாடும் தொடர்கின்றது. அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பவர்களே நாட்டின் பெரும்பான்மை. அவர்களில் அனேகர் காலையில் தோங்காய் சம்பலும் பாணும் அல்லது பொல் ரொட்டி உண்ணுபவர்கள். ஆறு அல்லது ஏழு உறுப்பினர்களை கொண்டிருக்கும் ஓர் ஏழைக் குடும்பம் ஆகக் குறைந்தது இரண்டு வேளையாவது திருப்தியாக உணவு உண்ண முடியாதளவுக்கு தேங்காய் விலை அதிகரிப்பு, அத்துடன் அரிசி தட்டுப்பாடு - கூடவே மரக்கறிகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

சாதாரணமாக உள்ளூரில் விளைவிக்கப்படும் கத்தரிக்காய், பயத்தங்காய் போன்ற மரக்கறி வகைகளே என்றுமில்லாதவாறு அதிக விலையில் விற்கப்படுகின்றன. இந்த விலைகளை தீர்மானிப்பவர்கள் யார் - விலை நிர்ணயம் முறையாக மேற்பார்வை செய்யப்படுகின்றதா? மறுபுறும் தேங்காய் மற்றும் அரிசி தடுப்பாட்டால் அதிகம் பொருட்கள் பதுக்கப்படுகின்றன.

இன்றுவரையில் அரசாங்கம் பெரும் அரிசி ஆலை முதலாளிகள் மீது கைவைக்கவில்லை. அவர்கள்தான் அரிசி விலையை தீர்மானிக்கின்றனர். அரிசி விநியோகம் முழுவதும் ஒரு சிலரது கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. இந்த நிலையில் சாதாரண மக்களுக்கு நெருக்கமான அரசாங்கத்தின் கீழ் சாதாரண மக்கள் திருப்தி கொள்ள முடியாது என்றால் - நாங்கள் சாதாரண மக்களின் பிள்ளைகள் என்று கூறிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

பெரிய விடயங்களை விட்டுவிட்டு முதலில் மக்கள், அன்றாட வாழ்வியலில் நெருக்கடியற்ற வகையில் வாழக் கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும். ஓர் அரசாங்கத்தின் முதல் கடமை அதுதான். தேங்காய் விலை எதனால் அதிகரித்துச் செல்கின்றது? அனைத்தையும் வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்ய வேண்டும் என்றால் உள்ளூர் உற்பத்தி, வளர்ச்சி பற்றி பேசுவதில் என்ன பொருண்டு.

இலங்கை அடிப்படையில் ஒரு விவசாய நாடு அத்துடன் மீன்பிடி பிரதான தொழில் ஆனால், ஓர் அரசாங்க ஊழியர் கூட, நல்ல வகை மீன் சாப்பிடுவதற்கு அச்சப்படுமளவுக்கே மீன்களின் விலைகள் காணப்படுகின்றது. இந்த நிலைமையை மாற்றியமைப்பார்கள் என்னும் எதிப்பார்ப்புடன்தான் தேசிய மக்கள் சக்தியை மக்கள் ஆதரித்தனர். ஆனால் நிலைமையோ படுமோசமாக இருக்கின்றது.

# வவுனியாவில் ஊர் சுற்றும் போட்டி




வவுனியா, ஜன.27

வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்டமட்ட ஊர் சுற்றும் ஓட்டப் போட்டி நேற்றையதினம் நடைபெற்றது.

வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலய முன்றலில் பிரதேச செயலாளர் மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர் திரேஸ்குமாரால் கொடி அசைத்து குறித்த போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

15 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 15 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்குமானதாக இந்தப் போட்டி அமைந்திருந்தது.

இதேவேளை, மாவட்ட ஊர் சுற்றும் போட்டியானது, பாடசாலையில் இருந்து ஆரம்பித்து, மருத்துவமனை சுற்றுவட்ட வீதி, இலுப்பையடி, குடியிருப்பு கோவிலின் ஊடாக வவுனியா குளக்கட்டின் ஊடாக பூந்தோட்டம் சந்தியின் ஊடாக மீண்டும் குடியிருப்பு விநாயகர் ஆலயத்துக்கு அருகில் முடிவடைந்தது.

இப் போட்டியில் பங்கேற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயங்களும் வழங்கப்பட்டன.

வவுனியா பிரதேச செயலாளர் இ. பிரதாபன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டி நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# எம். ஜி. ஆர். பிறந்தநாள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜன.27

தமிழக முன்னாள் முதலமைச்சர், புரட்சித் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரனின் 108 ஆவது பிறந்ததின நிகழ்வு இன்று மாலை 04.00 மணிக்கு பண்டத் தரிப்பு - சாந்தை விநாயகர் கலையரங்கில் நடைபெறவுள்ளது. எம். ஜி. ஆர். முன்னேற்றக்கழகம் - சமூக சேவை அமைப்பு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இதன்போது புற்றுநோய், சிறுநீரக நோய், பார்வை குறைபாடு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கல், விளையாட்டில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கல், சிறுவர்கள் - முதியோர் களுக்கு உதவிகள் வழங்கல் மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு என்பன நடைபெறவுள்ளன. (எ-05)

# வடக்கு பொலிஸ்மா அதிபர் வழிகாட்டலில் யாழில் கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டம்



யாழ்ப்பாணம், ஜன.27

வடக்கு மாகாண பொலிஸ்மா அதிபர் திலக் தனபாலவின் வழிகாட்டலின் கீழ் பொலிஸ் உத்தியோகத்தர்களால் கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி, நேற்றுக் காலை காங்கேசன்துறை கடற்கரையை துப்புரவு செய்யும் பணியில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர். (எ-05)

# மாலுசந்தியில் மக்கள் சிரமதானம்



யாழ்ப்பாணம், ஜன.27

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையும் கணபதி அறக்கட்டளை நிறுவனமும் இணைந்து கிளீன் சிறீலங்கா என்னும் தேசிய எண்ணக்கருவுக்கு அமைவாக நேற்றையதினம் சிரமதானப்பணியை முன்னெடுத்தன.

இதன்போது, மாலுசந்தியிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரம் கொண்ட பிரதான வீதியானது மக்களால் சிரமதானம் செய்யப்பட்டது. (எ-05)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - 27 திங்கட்கிழமை
குரோதி வருடம் - தை 14
நல்ல நேரம்:6.00 -7.30
ராகு காலம்:7.30 - 9.00
திதி :திரையோதசி




**மேடம்**

கடந்த இரண்டு நாட்களாக இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். குடும்பத்தில் அமைதி நிலவும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**இடபம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**

உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

**கடகம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். தொட்டது துலங்கும் நாள்.

**சிம்மம்**

மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்க கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள்.

**கன்னி**

நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புது வேலை கிடைக்கும். தாயாருக்கு கை கால், வலி வந்து போகும். நல்ல செய்தி வரும்.

**துலாம்**

தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். புதுவாகனம் வாங்குவீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள்.

**விருச்சிகம்**

கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். ஆடை ஆபரணம் சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்துக் கொள்வார்கள்.

**மகரம்**

ஒரு விஷயத்தை நினைத்து அதிக அளவில் குழப்பம் அடைவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். போராடி வெல்லும் நாள்.

**கும்பம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நம்பிக்கைக்கு உரியவர்களை கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**மீனம்**

உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.

# யாழில் இந்தியாவின் குடியரசு தின நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், ஜன.27

இந்தியாவின் 76ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

காலை 09 மணியளவில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றதுடன், தூதுவரால் இந்திய தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவின் ஜனாதிபதி திரவுபதி முர்முவின் குடியரசு தின வாழ்த்து செய்தியை துணைத் தூதுவர் சாய் முரளிவாசித்தார். தொடர்ந்து இந்திய தேசபக்திப் பாடல்கள், நடனங்கள், கவிதைகள் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. (எ- 05)

# யாழ். நித்தியவெட்டை மருத்துவமனையில் கடற்படையினர் சிரமதானம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஜன.27

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கடற்படையினரால் நித்தியவெட்டை மருத்துவமனை சுற்றுச்சூழல் நேற்று முன்தினம் துப்புரவு செய்யப்பட்டது.

நித்தியவெட்டை மருத்துவமனை மருத்துவர் யோ. திவ்யாவின் கோரிக் கைக்கு இணங்க வெற்றிலைக் கேணி கடற்படை அதிகாரி கே. எஸ். ரணசிங்கவால் இந்த சிரம தானப் பணி ஒழுங்கமைக்கப்பட்டது.

மருத்துவமனையை சுற்றி சிறந்த முறையில் சிரமதானப் பணியை மேற்கொண்டு குறித்த சூழலை அழகாக்கி கொடுத்த கடற்படையினருக்கு மருத்துவரால் நன்றி தெரிவிக்கப்பட்டது. (எ-05)

# ஆய்வாளர் அருணா செல்லத்துரையின் இராவணனார் நூல் வெளியீட்டு விழா



வவுனியா,ஜன.27

சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஆய்வாளருமான அருணா செல்லத்துரையின் "இராவணனார்" லங்கா பாங்கு என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழறிஞர் கலாநிதி தமிழ் மணி அகளங்கன் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரையை இலக்கியச் சுடர் கதிர்காமசேகரனும் நூல் நயவுரையை பேராசிரியர் வா. மகேஸ்வரனும் ஆற்றியிருந்தனர்.

இதன்போது, நூல் பிரதிகளை நூல் ஆசிரியர் அருணா செல்லத்துரை உட்பட விருந்தினர்கள் வழங்கி வைக்க நிகழ்வில் கலந்து கொண்டோர் பெற்றுக் கொண்டனர். (எ-10)

# மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு மன்னாரில் விசேட கலந்துரையாடல்

## போக்குவரத்து, சுகாதாரம் குறித்து ஆராய்வு

மன்னார், ஜன.27

மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவுள்ள மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடல் கடந்த 24 ஆம் திகதி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வரர் ஆலய திருப்பணி சபையின் தலைவர் இராமகிருஷ்ணன் கலந்து கொண்டார்.

மேலும், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், இ. போ. ச. - தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள், பொலிஸார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள மகா சிவராத்திரி விழாவுக்கான முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன. இதில், நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கடந்த வருடங்களைப் போன்று இம்முறையும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளவுள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன. குறிப்பாக போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், மின் சாரம், நீர் விநியோகம், உணவு, பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளடங்கலாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து விடயங்கள் குறித்தும் ஆராயப் பட்டன. (எ)

# வயலுக்கு சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஜன.27

கிளிநொச்சியில் வயலுக்கு சென்ற நிலையில் காணாமல் போன குடும்பஸ்தர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் அக்கராயன் [illegible] கண்ணகிபுரம் முக்கம்பன் பகுதியில் இடம்பெற்றது.

38 வயதுடைய சின்னத்துரை காந்தரூபன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கராயன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு விசாரணைகளிலும் அரசாங்கம் தலையிடமாட்டாது!

## ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு

கொழும்பு, ஜன. 27

**எந்தவொரு விசாரணைகளிலும் அரசாங்கம் தலையிடாது எனவும், விசாரணைகளை மேற்கொள்பவர்களை பலப்படுத்துவதற்கு மாத்திரமே நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஹோமாகம - பிட்டிபன பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றுகையில் ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இன்னும் ஒரிரு வாரங்களில் உள்நாட்டு சந்தையில், நிர்ணய விலைக்கு புறம்பாக சந்தையில் அரிசியை விற்பனை செய்யும் செயற்பாடு முற்றாக ஒழிக்கப்படும்.

தற்போது உடனடியாக இதனை செய்வதற்கு முயன்றால் பாரிய நெருக்கடி ஏற்பட்டுவிடும்.

அண்மையில் முன்னாள் அமைச்சர் ஒருவரும் அவரது மனைவியும் கைதுசெய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

அந்த முன்னாள் அமைச்சரின் பிரத்தியேக செயலாளரே இங்கு கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்ப ரீதியாக எவரும் கைதுசெய்யப்படவில்லை, குடும்ப ஆட்சி நிலவியமையினாலேயே முன்னாள் அமைச்சரின் மனைவியும் கைதாகினார்.

9 வருடங்களாக மறைக்கப்பட்டிருந்த கோப்புகள் தற்போது திறக்கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கம் எந்தவொரு நபர்களையோ, வழக்குகளையோ தெரிவு செய்வதில்லை. உரிய வகையில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு மாத்திரமே சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன.

எனவே, ஒருபோதும் அரசாங்கம் விசார ணைகளில் தலையி டாது-என்றார். (அ)

# அச்சுறுத்தல்களுக்கு நாம் அடிபணியோம்!

## நாமல் ராஜபக்ஷ சூளுரை

கொழும்பு, ஜன. 27

"நாம் தவறிழைக்கவில்லை. எமது கரங்களில் இரத்தம் படியவில்லை. எனவே, எதற்கும் அஞ்சப்போவதில்லை." என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்ட பிறகு சி.ஐ.டிக்கு வந்திருந்த நாமல் ராஜபக்ஷ ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

சனிக்கிழமையன்றுகூட பொலிஸார் தற்போது தீயாக வேலை செய்கின்றனர்போலும். நல்லது. எம்மை கைது செய்வதில் காட்டும் ஆர்வத்தை, பாதாள குழுக்களை ஒடுக்குவதிலும் பொலிஸார் காட்ட வேண்டும்.

மாறாக அரசியல் தேவைகளுக்காக சட்டத்தை அமுல்படுத்த முற்படக்கூடாது.

அரசாங்கம் அடக்குமுறையை கையில் எடுத்துள்ளது. நல்லாட்சிகாலத்தில் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் செயலாளராக இருந்தவரே தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்றார்.

தமது இயலாமையை மூடி மறைப்பதற்காகவே அவ்வப்போது கைதுகள் இடம்பெறுகின்றன.-என்றார்.

(அ)

# அரச சேவையை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்!

## கூறுகிறார் ஜனாதிபதி அநுரகுமார

கொழும்பு, ஜன. 27

பொதுமக்கள் உரிமை என்ற வகையிலும் அரச அதிகாரிகளின் பொறுப்பு என்ற வகையிலும் அரச சேவையை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள அரச சேவையில் பிரஜைகள் திருப்தியடையவில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசாங்க சேவையை டிஜிற்றல் மயமாக்குவதன் ஊடாக பிரஜைகளுக்கு வினைத்திறனான சேவையை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற அநுராதபுர மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் அரச சேவையில் சரியான தரவு கட்டமைப்பொன்றை தயாரிப்பதற்கு செயலாற்றி வருவதாகவும், தற்போது அரச சேவையில் உள்ள தரவுகளின் அடிப்படையில் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கான இயலுமை இல்லை எனவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அரச ஊழியர்களுக்கான நியாயமான அடிப்படை சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடுகளை மூன்று வருடங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பான முன்மொழிவுகள் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரச சேவையை வலுப்படுத்துவது மற்றும் அரச சேவைக்கான செலவை நிர்வகிப்பதன் அவசியம் குறித்து இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில், அரச சேவையில் காணப்படும் அத்தியாவசியமான 30 ஆயிரம் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பான நிதி ஒதுக்கீடுகளுக்கான முன்மொழிவுகளை இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் முன்வைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

தொழில்நுட்ப காரணங்களால் நேர்முகப் பரீட்சைகள், தாமதமாகக்கூடிய வெற்றிடங்கள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டதுடன், ஒருங்கிணைந்த அரச சேவை மூலம் மனிதவளத்தை சரியான முறையில் முகாமைத்துவம் செய்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

(அ)

# ஜனாதிபதி நிதியத்தின் பிரதேச மட்டத்திலான சேவை எதிர்வரும் 7ஆம் திகதி முதல் ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 27

மக்களுக்கு மிகவும் பயனுள்ள சேவையை வழங்கும் நோக்கில் ஜனாதிபதி நிதியத்தின் பிரதேச செயலக மட்டத்தில் சேவை வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி அலரி மாளிகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்படி, கொழும்பில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஜனாதிபதி நிதிய அலுவலகத்தின் சேவைகளை நாடளாவிய ரீதியில் உள்ள 361 பிரதேச செயலக அலுவலகங்களிலும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஐந்து பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டு இது தொடர்பில் முன்னோடித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் இத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியம் தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கும் வகையில் இன்று (25) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இணையம் மூலமான கலந்துரையாடலின் போதே இந்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி நிதியத்திற்கு புதிய டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வலையமைப்பு வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் ஊடாக மக்களுக்கு மிகவும் வினைத்திறன் மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்காக செயலாற்றி வருவதாக ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகே தெரிவித்தார்.

இதனூடாக எவராயினும் தமது பிரதேச செயலகத்தின் ஊடாக நோய்க்கு அமைவான கொடுப்பனவிற்கு விண்ணப்பிக்க முடியும். மேலும், அது தொடர்பான ஆவணங்களை பிரதேச செயலகத்தினால் உடனடியாக பெற்றுக்கொள்ள முடியும்.

நோயாளர்களை தெரிவு செய்யும் முறை, அவர்களின் ஆவணங்களை தயாரிக்கும் முறை, ஜனாதிபதி நிதியத்தின் பொறுப்பு என்பன தொடர்பில் இக்கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (அ)

# அழிவடைந்ததாகக் கருதப்பட்ட வெளவால் இனம் 58 ஆண்டுகளின் பின் இலங்கையில் கண்டுபிடிப்பு!

கொழும்பு, ஜன. 27

இலங்கையில் 58 ஆண்டுகளாகக் காணப்படாத அரிய இனமான டிக்கெல்ஸ் வெளவால் (ஹெஸ்பெரோப்டெனஸ் டிகெல்லி) மீண்டும் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையின் வெளவால் ஆராய்ச்சியாளர் கலாநிதி தாரகா குசுமிந்த கூறுகிறார்.

ஊடகங்களுக்குப் பேசிய குசுமிந்த, 1963 முதல் இலங்கையில் இந்த இனம் பதிவு செய்யப்படவில்லை என்று அவர் கூறினார்.

இதன் விளைவாக, இந்த விலங்கு சிவப்பு தரவு பட்டியலில் தரவு குறைபாடுள்ள இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சிறிய உடல் வெளவால் வெஸ்பெர்டி லியோனிடே குடும்பத்தைச் சேர்ந்தது.

இந்த இனம் பொதுவாக வறண்ட, ஈரமான மற்றும் இடைநிலை சுற்றுச்சூழல் மண்டலங்களில் காணப்பட்டாலும், 1963 முதல் இந்த விலங்கு இருந்ததற்கான எந்த பதிவுகளும் இல்லை என்று குசுமிந்த கூறினார்.

அப்போது சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தற்போது கொழும்பில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்த இனத்தின் மூன்று வெளவால்கள் சமீபத்தில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

குருவிட்டவில் உள்ள எக்னாலிகொட, கண்டியில் உள்ள ஹல்லோலுவ மற்றும் கொழும்பில் உள்ள ஹோகந்தர ஆகிய இடங்களில் இந்த வெளவால்கள் காணப்பட்ட தாக தகவல்கள் தெரிவிக்கின் றன.

வரலாற்று மற்றும் சமீபத்திய ஆய்வுகளின் அடிப்படையில், இந்த வெளவால் இனம் உயரமான, பெரிய இலைகளைக் கொண்ட தாவரங்களில் வாழ்கிறது என்று குசுமிந்த விளக்கினார்.

(அ)

# அரசியல்வாதிகள் உட்பட சிலருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஜன. 27

அரசியல்வாதிகள் உள்ளிட்ட சிலருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது குறித்து ஆராயப்பட்டு வருவதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

சில சர்சைக்குரிய சம்பவங்களுடன் குறித்த அரசியல்வாதிகள் தொடர்புப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டது.

சர்சைக்குரிய சம்பவங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சில குறைபாடுகள் காணப்படுவதால் அந்த விசாரணைகளை மீண்டும் முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டது. (அ)

# டெங்கு நோய் தொடர்பில் அவதானம்!

கொழும்பு, ஜன. 27

இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 4,044 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 614 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது. கடந்த 3 வாரங்களில் பதி வான டெங்கு நோயாளர் களின் எண்ணிக்கைக்கு அமைய, 19 சுகாதார அதிகாரி பிரிவுகள் அதிகளவில் டெங்கு பரவல் அபாயமிக்க பகுதிகளாக அடையாளம் காணப்பட் டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை, வெள்ளத்தால் 92,471 பேர் பாதிப்பு!

## கிழக்கு மாகாணத்தில் சேதம் அதிகம்

கொழும்பு, ஜன. 27

**நாட்டில் கடந்த 13ஆம் திகதி முதல் பெய்த கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக, 27 ஆயிரத்து 751 குடும்பங்களைச் சேர்ந்த 92 ஆயிரத்து 471 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

மேல் மாகாணம் தவிர ஏனைய அனைத்து மாகாணங்களிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

கனமழையால் கிழக்கு மாகாணம் மிகவும் பாதிக்கப்பட்டதுடன், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் 17 ஆயிரத்து 952 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 878 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்,

வட மாகாணத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் 7 ஆயிரத்து 970 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 299 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் ஆயிரத்து 369 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 599 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 319 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

## காலியில் 3 பஸ்கள் மோதி பெரும் விபத்து!

கொழும்பு, ஜன. 27

காலி, இமதுவ - அங்குலுகஹா சந்தியில் நேற்று காலை மூன்று பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 29 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு தனியார் பயணிகள் பஸ்களும், அலுவலக ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றும் குறித்த விபத்தில் சிக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

நிறுத்தப்பட்டிருந்த பஸ் ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்த பஸ் மோதியதுடன், அதன் பின்னால் வந்த மற்றொரு பஸ் அதன் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் இமதுவ மற்றும் கராபிட்டிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## இலங்கை மின்சார சபை ஊழியர்கள் மூவர் காயம்!

கொழும்பு, ஜன. 27

மின்சார தூண் உடைந்து விழுந்ததில் மின்சார சபையின் மூன்று ஊழியர்கள் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொனராகலை, செவனகல பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின்சார சபையின் மூன்று ஊழியர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமானதால் எம்பிலிப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலையில் இருந்து கராப்பிட்டிய தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

## பென்சில்களால் சிறுவருக்கு ஆபத்து!

கொழும்பு, ஜன. 27

சந்தையில் விற்கப்படும் பெரும்பாலான பென்சில்களில் சிறுவர்களின் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பல இரசாயனங்கள் காணப்படுவதாக மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக பாடசாலைச் சிறுவர்கள் பயன்படுத்தும் பென்சில்கள் பல்வேறு வண்ணங்களில் கவர்ச்சிகரமான தோற்றத்தில் விற்கப்படுவதால் குழந்தைகள் அவற்றை வாங்குவதற்கு மிகவும் ஆர்வம் காட்டுகின்றனர் எனவும், அவ்வாறான பென்சில்களில் அதிக அளவு இரசாயனங்கள் மற்றும் பாதரசம், ஆர்சனிக் மற்றும் காட்மியம் போன்ற உடலுக்கு தீங்கு விளைவிக்கும் உலோகங்கள் பூசப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறுவர்கள் பென்சில்களை பயன்படுத்தும் போது தங்களை அறியாமலேயே பென்சிலை வாயில் வைத்து மென்று உட்கொள்வதால், அவர்கள் நோய் வாய்ப்படலாம் எனவும் மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மீனவர்களுக்கு காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்த அரசு நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 27

மீனவர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.

இதற்காக ஒரு காப்பீட்டு நிறுவனம் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளதாகவும், எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்துக்கு பின்னர் மீனவர்களுக்கு இந்தக் காப்பீட்டுத் திட்டத்தை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காலி பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மொத்த மற்றும் பகுதி சொத்து சேதம் மற்றும் உயிரிழப்பு ஏற்பட்டால் சலுகைகள் வழங்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# 2025 நெல் கொள்வனவுக்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 27

இந்த ஆண்டு நெல் கொள்வனவுக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஹோமாகம, பிடிபன பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பங்கேற்ற ஜனாதிபதி, நெல் கொள்முதல் செய்வதற்காக ஒரு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட அதிகபட்ச தொகை இதுவெனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நெல் கொள்முதல் செய்ய 500 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது. சமீபத்திய காலங்களில் ஒரு அரசாங்கம் ஒதுக்கிய மிகப்பெரிய தொகை இதுவாகும். நாங்கள் எங்கள் நெல் களஞ்சியசாலைகள் அனைத்தையும் புதுப்பித்து வருகிறோம். எங்களது களஞ்சியசாலைகள் 300,000 கொள்ளளவு கொண்டவை, ஆனால் அவற்றில் 300,000 கொள்ளவுக்கான நெல்லை எங்களால் கொள்வனவு செய்ய முடியாது. ஆனால் அந்தக் களஞ்சியசாலைகளை தனியார் துறை அரிசி சேகரிப்பாளர்களிடம் கொடுக்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அதன் பின்னர் அவர்கள் நெல்லை எடுத்து எங்கள் களஞ்சியசாலைகளில் சேமித்து வைப்பார்கள். அரிசியின் அளவு நமக்குத் தெரியும். இலங்கையில் அரிசி ஆலைகளை நடத்தும் அனைத்து நெல் சேகரிப்பாளர்கள் மற்றும் வணிகர்களையும் அரசாங்கத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டு, செய்தித்தாளில் ஒரு விளம்பரம் செய்தோம். அரசாங்கத்தில் பதிவு செய்யப்படாத எவரும் இனிமேல் நெல் இருப்புகளைச் சேகரிக்க முடியாது. கொஞ்சம் கூட சேகரிக்க முடியாது. நீங்கள் பதிவு செய்த தன் பின்னர் எவ்வளவு அரிசியை சேமித்து வைத்திருக்கிறீர்கள் என்பது குறித்து வாராந்திர அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்-என்றார். (அ)

# கடந்த ஆண்டில் 24 ஆயிரத்தை தாண்டிய சுற்றிவளைப்புக்கள்

கொழும்பு, ஜன. 27

2024 ஆம் ஆண்டில் நுகர்வோர் விவகார அதிகார சபை 24,761 சுற்றிவளைப்புக்களை முன்னெடுத்துள்ளது.

இதன்போது 23,953 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அதில் முடிக்கப்பட்ட வழக்குகளுக்கு நீதவான் நீதிமன்றங்களால் 207 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தாக்கல் செய்யப்படாத சோதனைகளுக்கு உடனடியாக வழக்குத் தாக்கல் செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த சுற்றிவளைப்புக்களின் போது, அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களின் விபரங்களைக் குறிப்பிடாதது, தகவல்களை மாற்றுவது, குறிக்கப்பட்ட விலையை மாற்றுவது மற்றும் வேறு விலையைக் குறிப்பிடுவது, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, மின் சாதனங்களுக்கு உத்தரவாதக் காலத்தை வழங்காதது, இருப்புகளை மறைத்து வைத்திருத்தல், உரிய பற்றுச்சீட்டு வழங்காமை உள்ளிட்ட நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தை மீறிய வர்த்தகர்கள் தொடர்பாக இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன

அத்துடன் உணவு, அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருந்துகள், கட்டுமானப் பொருட்கள் மற்றும் மின்சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு நுகர்வோர் பொருட்களை உள்ளடக்கி இந்த சோதனைகள் நடத்தப்பட்டதுடன், இதில் அதிக எண்ணிக்கையிலான சோதனைகள் அரிசி (3114 சோதனைகள்), பாண் (1624 சோதனைகள்) மற்றும் பிஸ்கட் (1086 சோதனைகள்) ஆகியன தொடர்பில் நடத்தப்பட்டன.

இந்த சோதனைகளின் போது, பல்பொருள் அங்காடிகள், உணவகங்கள், மருந்து கடைகள், தைத்த ஆடைகள் வர்த்தக நிலையங்கள், கையடக்க தொலைபேசி மற்றும் மின் சாதன கடைகள், கட்டுமானப் பொருட்கள் கடைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் கடைகள் ஆகியவை பிரதானமாக சோதனை செய்யப்பட்டன.

இந்த சோதனைகள் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டதுடன், அதிக சோதனைகளை நடத்திய மாவட்டங்களில் முக்கியமாக குருநாகல், கம்பஹா, கண்டி, கேகாலை, புத்தளம், அனுராதபுரம், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் மாத்தறை ஆகியவை அடங்கியுள்ளதுடன், அந்த ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஆண்டு முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவற்றில் குருநாகல் மாவட்டத்திலேயே கடந்த ஆண்டில் 2282 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டில் நுகர்வோர் அளித்த முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கவும், நாடு முழுவதும் உள்ள வர்த்தக நிலையங்களை சோதனை செய்யவும், உளவாளிகள் மூலம் வர்த்தகர்கள் செய்த தவறுகளைக் கண்டறிந்து, சட்ட நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# விசேட சோதனையில் பெருந்தொகை சிகரெட் சிக்கியது

கொழும்பு, ஜன.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகளை இலங்கை சுங்க வருவாய் பணிக்குழுவுடன் இணைக்கப்பட்ட அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கொழும்பு துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள ஒரு களஞ்சியசாலையில் நடத்தப்பட்ட விசேட சோதனையின் போது, 20 கல்சியம் ஹைட்ராக்சைட் பீப்பாய்களில் இந்த சிகரெட் தொகை மறைத்து வைத்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

420,000 மன்செஸ்டர் ரக சிகரெட்டுகள் அந்த பீப்பாய்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த 20 கல்சியம் ஹைட்ராக்சைட் பீப்பாய்கள், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து களுத்துறை பகுதியில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் மேலதி சுங்க பணிப்பாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.சுங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட் தொகையின் மதிப்பு 31.5 மில்லியன் ரூபாய் என்று அவர் மேலும் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோஷித ராஜபக்ஷ கைது அரசியல் பழிவாங்கலல்ல!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறுகிறார்

கொழும்பு, ஜன. 27

**யோஷித ராஜபக்ஷவை, அவர் மகிந்தவின் மகன் என்பதற்காக கைதுசெய்யவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

எவராவது சந்தேகத்திற்கிடமான முறையில் அல்லது சட்டவிரோதமாக நிலத்தை கொள்வனவு செய்திருந்தால் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

சிலர் தெரிவிப்பது போல சமீபத்தைய கைதுகளுக்கு அரசியல் பழிவாங்கல் காரணமில்லை என தெரிவித்துள்ள அமைச்சரவை பேச்சாளர், எவராவது சந்தேகத்துக்கிடமான முறையில் அல்லது சட்டவிரோதமாக நிலத்தை கொள்வனவு செய்திருந்தால் சி.ஐ.டியினர் அது குறித்து விசாரணை செய்வார்கள். சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

யோஷித மகிந்தவின் மகன் என்பதற்காக கைது செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. அவை தொடர்கின்றன. சி.டி.யினரும் பொலிஸாரும் தங்கள் விசாரணைகள் குறித்த விவரங்களை நீதிமன்றத்திற்கு தெரிவித்து உரிய முறையில் கைது நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

# மத்தியஸ்த சபையில் மோதல் பறிபோனது ஒருவரின் உயிர்!

கொழும்பு, ஜன. 27

மாத்தறை - திஹகொட பகுதியில் மத்தியஸ்த சபைக்குச் சென்ற இரு தரப்பினரிடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாத்தறை திஹகொட பகுதியில் மத்தியஸ்த சபைக்குச் சென்ற இரு தரப்பினரிடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன் தினம் பிற்பகல் திஹகொட, பெத்தங்கவத்தை விகாரையில் நடைபெற்ற மத்தியஸ்த சபை அமர்விலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மத்தியஸ்த சபைக்கு சென்ற இரு தரப்பினரிடையே ஏற் பட்ட வாக்குவாதம் முற்றி நடந்த தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் திஹகொட பகுதியில் வசிக்கும் 73 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திஹகொட பொலிஸ் நிலையத்தால் மத்தியஸ்த சபைக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடு தொடர்பாக, இருதரப்பினருக்கு இடையேயான பிணக்கினை தீர்க்க நேற்று நடைபெற்ற மத்தியஸ்த சபை அமர்வில் இரு தரப்பினரும் அழைக்கப்பட்டனர். சம்பவ இடத்தில் இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் தாக்குதலுக்கு வழிவகுத்தது, அதில் ஒருவர் காயமடைந்து மாத்தறை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (அ)

# இளைஞர்களை மீளவும் ஏமாற்றுகின்றது அரசு!

கொழும்பு, ஜன. 27

அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகனச் செலவை மக்கள் மீது சுமத்த எத்தனிப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டு மக்கள் மத்தியில் அரசியல் பற்றிய குரோதத்தை ஏற்படுத்தி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மீண்டும் இளைஞர்களை ஏமாற்ற முயல்கின்றது. ஆட்சியை கைப்பற்றுவதற்கு முன்னராக அரசாங்கம் கூறிய விடயங்கள் தற்போது பொய்யாகியவண்ணமுள்ளது.

அரசியலமைப்பிற்கு அமைய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோக பூர்வ இல்லம் தொடர்பில் தற்போது பேசப்படுகின்றது. புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் கடந்த அரசாங்கத்தின் ஆட்சியில் வாகன அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்யும் நடவடிக்கையை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்டிருந்தார்.

அவ்வாதறாக புதிய கலாசாரத்தை உருவாக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டார். ஆயினும் கொவிட் உள்ளிட்ட நெருக்கடிகளின் காரணமாக அவற்றை அவரால் முறையாக செயற்படுத்த இயலாது போனது. அவற்றை சரிவர நிறைவேற்றுவதாக கூறிக் கொண்டே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது.

ஆனால் தற்போது இந்த அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனச் செலவை மக்கள் மீது சுமத்த எத்தனிக்கின்றது-என்றார். (அ)

# மதுபானப் பாவனை காரணமாக வருடாந்தம் 20,000 உயிரிழப்புகள்!

கொழும்பு, ஜன. 27

மதுபான பாவனை மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் காரணமாக நாட்டில் வருடாந்தம் 20 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அதன் உறுப்பினர் அநுலா விஜேசுந்தர இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-குறைந்த விலையில் விற்பனை செய்யக் கூடிய மதுபான போத்தல்களைத் தயாரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மதுபானம் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதொன்று என்பதனைச் சகலரும் அறிவார்கள்.

இந்தநிலையில் அவ்வாறான புதிய கொள்கைகள் முன்னோக்கிக் கொண்டு செல்லப்படுமாயின் சுசிப்பு உள்ளிட்டவற்றின் பாவனை அதிகரிக்கக்கூடும்.

அதேநேரம் இளைஞர்கள் உள்ளிட்டோரிடம் மதுபான பாவனை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் நிலவுகிறது-என்றார்.

# சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அரசுக்கு சொந்தமானதாக பேணப்படும்

கொழும்பு, ஜன. 27

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமாக தொடர்ந்து இயக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முந்தைய அரசாங்கம் சிறிலங்கன் விமான நிறுவனத்தை விற்பனை செய்ய திட்டமிட்டிருந்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பிறகு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்

# இலத்திரனியல் அடையாள அட்டை திட்டம் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி

கொழும்பு, ஜன. 27

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயல்முறையை அறிமுகப்படுத்துவது மற்றும் அது தொடர்பான பிரச்னைகள் குறித்து கலந்துரையாடுவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று முன் தினம் கொழும்பில் உள்ள இலங்கை தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தில் டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்ன தலைமையில் நடைபெற்றது.

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முக்கிய சவால்கள் மற்றும் செயன்முறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான கருத்து பறிமாற்றம் மற்றும் இது குறித்து எழுந்துள்ள பிரச்னைகளுக்கு சாத்தியமான தீர்வுகளை அடையாளம் காணுதல் என்பனவும் இதன்போது இடம்பெற்றன.

ஜனாதிபதியின் டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பான தலைமை ஆலோசகரும் இலங்கை தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் தலைவருமான ஹான்ஸ் விஜயசூரிய மற்றும் அதன் பணிப்பாளர் சஞ்சய கருணாசேன ஆகியோர் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்ததுடன், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை திட்டம் குறித்து நீண்ட விளக்கமும் அளிக்கப்பட்டது. (அ)

# நீரில் மூழ்கிய இரு சிறுவர்களில் ஒருவர் உயிரிழப்பு!

வாரியபொல, ஹிந்த கொல்ல கிராமத்தில் உள்ள பாதுகாப்பற்ற கல்குவாரியில் குளிக்கச் சென்ற இரண்டு சிறுவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த இரண்டு சிறுவர்களும் கல்குவாரியில் உள்ள நீர் நிறைந்த குழியில் குளிக்கச் சென்று நீரில் மூழ்கிய நிலையில், பின்னர் இருவரையும் பிரதேசவாசிகள் மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும், மற்றைய சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். 13 வயதான சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்ததுடன், 16 வயதான சிறுவன் தற்போது சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இந்தியக் குடியரசு தின நிகழ்வு நேற்று கொழும்பு தூதரகத்தில்

கொழும்பு, ஜன. 27

இந்தியாவின் 76 ஆவது குடியரசுதினக் கொண்டாட்டங்கள் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் நேற்று கொண்டாடப்பட்டது.

இந்திய தூதுவரின் வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் பதில் தூதுவர் டாக்டர் சத்யாஞ்சல் பாண்டே இந்தியாவின் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையையும் பார்வையிட்டிருந்தார்.

அத்துடன் இந்திய ஜனாதிபதியின் குடியரசு தின உரையின் முக்கிய அம்சங்களும் பதில் தூதுவரால் இங்கு வாசிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் இலங்கை கடற்படையினரின் இசைக்குழாமினர் பாடல்களை இசைத்திருந்த அதேசமயம் தூதரகத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஒரு கலாசார நிகழ்வினையும் ஒழுங்கமைத்திருந்தது.

“பல்வேறு மாநிலங்கள் ஒரே உணர்வு இந்தியா”என்ற தொனிப் பொருளின் கீழ் இந்திய கலாசார சங்கத்தினால் இந்திய சமூகங்களை சேர்ந்த சிறுவர்களை ஒன்றிணைத்து தேசபக்தி பாடல்களும் இசைக்கப்பட்டிருந்தன.

அதேபோல சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் மாணவர்கள் இந்திய தேசிய பாடலான வந்தே மாதரம் பாடலுக்கு நடன ஆற்றுகை ஒன்றையும் அரங்கேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுகளில் இந்திய சமூகத்தின் பலநூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை பதில் தூதுவர் மற்றும் இந்திய தூதரகத்தின் அதிகாரிகள் இந்திய அமைதி காக்கும் படையினரின் நினைவுத் தூபியில், உயிர் தியாகம் செய்த இந்திய அமைதி காக்கும் படை வீரர்களுக்கு தமது அஞ்சலிகளை செலுத்தி இருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையால் கிழக்கு மாகாணத்தில் நிரம்பி வழியும் நீர்த்தேக்கங்கள்!



கல்முனை, ஜன.27

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் அம்பாறையில் 7, மட்டக்களப்பு, திருகோணமலையில் தலா 2 நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணம் - அம்பாறை மாவட்டத்தில் உள்ள 9 நீர்த்தேக்கங்களில் 7, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 4 நீர்த்தேக்கங்களில் 2, திருகோணமலை மாவட்டத் தில் உள்ள 5 நீர்த்தேக்கங்களில் 2 இல் இவ்வாறு நீர் நிரம்பி வழிவதாக குறித்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# வாழைச்சேனையில் வெள்ளப் பெருக்கு!

மட்டக்களப்பு, ஜன.27

மட்டக்களப்பு, வாழைச் சேனையில் நிலவிவரும் மழையுடனான காலநிலை காரணமாக ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இருவர் காணாமல் போயுள்ளனர்.

இருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனதாக வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சந்திவெளி பகுதியைச் சேர்ந்த 52 மற்றும் 71 வயதுடைய இருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இந்த இருவரும் காய்கறிகளை சேகரித்துவிட்டு வயல்களில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது, புலிபாய்ந்த கல் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காணாமல் போன இருவரையும் கண்டுபிடிக்க வாழைச் சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கல்முனை வலயத்துக்கான இலவச பாடநூல் விநியோகம்



கல்முனை, ஜன.27

கல்முனை கல்வி வலயத்துக்கான இலவச சீருடை மற்றும் இலவச பாடநூல் வழங்கும் நிகழ்வு கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அதிபர் எம். ரிஷாத் தலைமையில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். ஐ .ஜாபீர் மற்றும் கல்முனை கோட்டக்கல்வி அதிகாரி யூ. எல். றியால் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கான செயல்திட்டம்

திருகோணமலை,ஜன.27

கடந்த சில நாட்களாக திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வந்த அடைமழை காரணமாக நிலாவெளி கடற்கரையோரங்களில் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த இளைப்பாறும் இடங்கள் சேதமடைந்து காணப்பட்டன. இதனை மாற்றியமைக்கும் "கிளீன் சிறீலங்கா" திட்டம் மற்றும் கடற்கரையோரங்களை துப்புரவு செய்யும் சிரமதானப் பணிகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் மிக அதிகமாக விரும்பி வருகின்ற இடமாக திருகோணமலை - நிலாவெளி பிரதேசம் காணப்படுகின்றது. கடந்த



வருடங்களை விட இவ்வருடம் மிக அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவதை எதிர்பார்த்து அவர்களின் வசதிகளுக் கேற்ப குறித்த பிரதேசங்களிலுள்ள இளைப்பாறும் கட்டில்கள், கதிரைகள் மற்றும் கூடாரங்கள் போன்றனவற்றை அழகு படுத்தும் பணிகளுடன் கடற்கரையோரங்களை சுத்தமாக வைத்திருக்கும் பணிகளை நிலாவெளி சுற்றுலாப் படகு சங்கம் முன்னெடுத்துள்ளது. (எ)

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்



மட்டக்களப்பு, ஜன.27

மட்டக்களப்பு, களுதாவளைக் கிராமத்தில் இயங்கி வரும் சமூக பொருளாதார கல்வி அபிவிருத்திச் சங்கத்தால் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு "கற்றலுக்கு கரம் கொடுப்போம்" எனும் தொனிப்பொருளின் கீழ் கொப்பிகள் உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு களுதாவளை மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும், இவ்வமைப்பின் கல்விப் பிரிவு தலைவருமான க. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார்.

இதன்போது கோட்டக்கல்விப் பணிப்பாளர் அருள்ராசா, களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய தலைவரும், முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளருமான க. பாஸ்கரன், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதில், பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள 35 பாடசாலைகளைச் சேர்ந்த 550 மாணவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

களுதாவளையை சேர்ந்த கட்டாரில் தொழில்புரியும் உறவுகளின் பெரும் நிதிப் பங்களிப்போடும் ஆதரவோடும், இயங்கிவரும் சமூக பொருளாதார கல்வி அபிவிருத்திச் சங்கம், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களை இனம்கண்டு அம்மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை இவ்வாறு வருடாந்தம் வழங்கி வருகின்றது. (எ)

# சுகாதாரத் துறையினருக்கு பாராட்டு




சாய்ந்தமருது, ஜன.27

சாய்ந்தமருது பிரதேச மருத்துவமனையின் நலன்புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் மருத்துவமனையின் பொறுப்பு வைத்திய அதிகாரி சனூஸ் காரியப்பர் தலைமையில் மருத்துவமனை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம விருந்தினராகவும், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம். மாஹிர், பிராந்திய சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஐ.எம்.முஜீப், பிராந்திய தொற்றா நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஐ.எம்.எஸ். இர்ஷாத் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.


சாய்ந்தமருது மருத்துவமனையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இந்த நிகழ்வின் போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் குறித்த மருத்துவமனையில் பணியாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்றவர்களும் இதன்போது பாராட்டி பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனர்கள் காஸா திரும்ப இஸ்ரேல் மீண்டும் நிபந்தனை

ஜெருசலேம், ஜன.27

**அர்பெல் யாஹூட் விடுதலை செய்யப்படும் வரை பலஸ்தீனியர்கள் வடக்கு காஸாவுக்கு திரும்ப அனுமதிக்கமாட்டோம் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.**




இஸ்ரேல், காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பு இடையே ஓராண்டுக்கு மேல் நீடித்து வந்த போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் தங்கள் வசமுள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளில் 7 பெண்களை இதுவரை விடுதலை செய்துள்ளது. இதற்கு ஈடாக 290 பலஸ்தீனியர்களை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது. குறிப்பாக நேற்று முன்தினம் இஸ்ரேலிய இராணுவ வீராங்கனைகள் 4 பேரை ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. இதற்கு ஈடாக 200 பலஸ்தீனியர்களை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது.

பணயக் கைதிகளில் அர்பெல் யாஹூட் என்ற இஸ்ரேலிய பெண்ணையும் ஹமாஸ் விடுதலை செய்ய வேண்டுமென இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

ஆனால், அர்பெல் யாஹூட்டை ஹமாஸ் விடுதலை செய்யவில்லை.

இந்த நிலையில், அர்பெல் யாஹூட் விடுதலை செய்யப்படும்வரை பலஸ்தீனியர்கள் வடக்கு காஸாவுக்கு திரும்ப அனுமதிக்கமாட்டோம் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தப்படி அர்பெல் யாஹூட் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறிவிட்டது.

இதனால், அர்பெல் யாஹூட் விடுதலை செய்யப்படும்வரை வடக்கு காஸாவுக்கு பலஸ்தீனியர்கள் திரும்ப அனும திக்கமாட்டோம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பணயக் கைதி அர்பெல் யாஹூட் உயிருடன் இருப்பதாகவும், பெப்ரவரி முதலாம் திகதி அவர் விடுதலை செய்யப்படுவார் என்றும் ஹமாஸ் தெரிவித்துள்ளது. (எ)

# ஐ. நா. ஊழியர்கள் உட்பட 153 பேர் திடீர் விடுதலை!

சனா, ஜன.27

ஐ. நா. ஊழியர்கள் உட்பட 153 பேரை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் திடீரென விடுதலை செய்தனர்.



இஸ்ரேல், ஹமாஸ் இடையே ஓராண்டுக்கு மேல் நீடித்து வந்த போர் தற்காலி கமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் போரில் ஹமாஸ் அமைப்புக்கு ஏமனில் செயல் பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியா ளர்கள் ஆதரவு வழங்கி வருகின்றனர். இஸ்ரேல் மீதும் அவ் வப்போது ட்ரோன், ஏவுகணை தாக்குதல் நடத்தினர்.

மேலும், ஹமாஸுக்கு ஆதரவு வழங்கும் பேரில் செங்கடல் பகுதியில் செல்லும் சரக்கு கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். சரக்கு கப்பல்களில் பயணிக்கும் மாலுமிகளையும் கைது செய்துள்ளனர்.

ஏமனில் தங்கள் கட்டுப்பாடில் உள்ள பகுதியில் செயல்பட்டு வந்த ஐ. நா. அமைப்பின் ஊழியர்களையும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைது செய்துள்ளனர். தன்னார்வு தொண்டு நிறுவனங்களை சேர்ந்த ஊழியர்களையும் கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில், தங்கள் பிடியில் உள்ள ஐ. நா. ஊழியர்கள், தன்னார்வு தொண்டு நிறுவனங்களின் ஊழியர்களில் 153 பேரை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நேற்று விடுதலை செய்துள்ளனர்.

இதேவேளை, ஐ.நா. ஊழியர்கள் மேலும் 7 பேரை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தடுத்து வைத்துள்ளனர். முன்னதாக, தங்கள் அமைப்பை சேர்ந்த ஊழியர்களை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைது செய்துள்ளதால் ஏமனில் செயல்பாடுகளை நிறுத்துவதாக ஐ. நா. அமைப்பு தெரிவித்துள்ளது. (எ)

# கஞ்சா வளர்க்க அரசு அனுமதி

புதுடில்லி, ஜன.27

கடந்தாண்டு இந்தியா முழுவதும் சட்டவிரோதமாக கஞ்சா செடிகள் வளர்த்த விவகாரத்தில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனிடையே இளைஞர்களிடையே கஞ்சா பயன்பாடு அதிகரித்து வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தது வருகின்றனர்.

இந்த நிலையில், இமாச்சலப் பிரதேச அரசு கஞ்சா செடியை வளர்க்க அனுமதி வழங்கியுள்ளது.

அதாவது தொழில், அறிவியல் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நோக்கங்களுக்காக, கட்டுப்பாடுகளுடன் கஞ்சாவை வளர்க்க இமாச்சலப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (எ)

# உலகளாவிய உதவி திட்டங்களுக்கான நிதியை நிறுத்த அமெரிக்கா தீர்மானம்

வாஷிங்டன், ஜன.27

உலகளாவிய உதவித் திட்டங்களுக்கான நிதியை நிறுத்தி வைக்க அமெரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப், கடந்த 20ஆம் திகதி பதவியேற்றார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் பல்வேறு அதிரடி அறிவிப்புகளை ட்ரம்ப் வெளியிட்டார்.

இந்த நிலையில், உலகளாவிய உதவித் திட்டங்களுக்காக வழங்கப்பட்டு வரும் நிதியை நிறுத்தி வைக்க அமெரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன்படி, இஸ்ரேல் மற்றும் எகிப்துக்கான மனிதாபி மான உணவுத் திட்டங்கள் மற் றும் இராணுவ உதவிகளைத் தவிர அனைத்து வெளிநாட்டு உதவிகளுக்கான புதிய நிதியை அமெரிக்க வெளிவிவகாரத் துறை முடக்கியுள்ளது.

இந்த உத்தரவால் உலகளவில் சுகாதாரம், கல்வி, மேம்பாடு, வேலைவாய்ப்பு பயிற்சி மற்றும் பிற வெளிநாட்டு உதவித் திட்டங்களுக்கு அமெரிக்க அரசு சார்பில் வழங்கப்பட்டு வரும் நிதியானது உடனடியாக நிறுத்தப்படக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. (எ)

# ரஷ்யாவுடன் உக்ரைன் போரிடுவது வீணானது

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

வாஷிங்டன், ஜன.27

ரஷ்யாவின் இராணுவ பலத்துக்கு எதிராகப் போரிடுவது வீணானது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மிகப் பெரிய, அதிக சக்தி வாய்ந்த நாட்டுக்கு எதிராக போரிட்டு வருகிறார். அதனை அவர் செய்திருக்கக் கூடாது. போரைத் தவிர்க்க, ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் அவர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதனை நான் எளிதில் செய்திருப்பேன்.

இரு நாடுகள் இடையே நீடிக்கும் மோதலால் இலட்சக் கணக்கானோர் காயமடைந்தும், பாதிக்கப்பட்டும் உள்ளனர். எனினும், ரஷ்யா விரைவில் போரை முடிவுக்கு கொண்டு வராவிட்டால், அந்த நாட்டுக்கு எதிராக அமெரிக்கா பெரியளவில் வரிகளை விதிக்கும்.


பொருளாதாரத் தடைகளையும் விதிக்கும் என ட்ரம்ப் கூறியுள்ளார். அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

# ரஷ்ய எண்ணெய் ஆலைமீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்

மொஸ்கோ, ஜன.27

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள எண்ணெய் ஆலை மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடை யிலான போர் 2 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இந்த போரில் உக்ரைனின் பல்வேறு பகுதிகளை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியது. அதே சமயம், மேற்கத்திய நாடுகளின் இராணுவ மற்றும் பொருளாதார உதவியுடன் உக்ரைன் இராணுவம் போரை எதிர்கொண்டு வருகிறது.



மேலும் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட சில பகுதிகளையும் உக்ரைன் இராணுவம் மீட்டது. இந்த நிலையில், ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோ உட்பட 13 பிராந்தியங்களை குறி வைத்து உக்ரைன் சரமாரி ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

குறிப்பாக மொஸ்கோவில் உள்ள ஓர் எண்ணெய் ஆலை மீது குண்டுகள் வீசப்பட்டன. இதில் அந்த எண்ணெய் ஆலை தீக்கிரையானது. எனினும், இந்த தாக்குதலில் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை. இது நடப்பாண்டில் ரஷ்யா மீது உக்ரைன் நடத்திய மிகப்பெரிய தாக்குதல் என்று கூறப்படுகிறது. அதே சமயம், உக்ரைனின் 121 ட்ரோன்களை ரஷ்ய இராணுவம் இடைமறித்து அழித்ததாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.(எ)

# தீவிரவாதி தஹாவூர் ராணாவை இந்தியாவிடம் ஒப்படைக்கவும்

## அமெரிக்க உச்ச நீதிமன்றம் அனுமதி

புதுடில்லி, ஜன.27

மும்பை தீவிரவாதத் தாக்குதல் குற்றவாளி தஹாவூர் ராணாவை இந்தியாவிடம் ஒப்படைக்க அமெரிக்க உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு மும்பையின் சத்ரபதி ரயில் நிலையம் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களுக்குள் நுழைந்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் 10 பேர் பயங்கர தாக்குதல் நடத்தினர். சுமார் 60 மணி நேரம் நடந்த இந்த துப்பாக்கிச் சண்டையில் வெளிநாட்டினர் உட்பட 166 பேர் உயிரிழந்தனர்.

தஹாவூர் ராணா இந்தத் தாக்குதலை திட்டமிடுவதற்காக மும்பையின் தாஜ் ஹோட்டலில் சில நாட்கள் தங்கியிருந்து நோட்டமிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட ராணா அமெரிக்க சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே ராணாவை இந்தியாவிடம் ஒப்படைக்க அமெரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா போராடி வெற்றி

## 2ஆவது போட்டியிலும் இங்கிலாந்து தோல்வி

சென்னை, ஜன.27

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது ரி - 20 போட்டியில் இந்தியா 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இரு அணிகளுக்கும் இடையே சென்னையில் நேற்று முன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 165 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக பட்லர் 45 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியா தரப்பில் அக்சர் பட்டேல் மற்றும் வருண் சக்கரவர்த்தி தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 166 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு சீரான இடைவெளியில் விக்கெட்கள் சரிந்தன. சஞ்சு சாம்சன் 5 ஓட்டங்களிலும், அபிஷேக் சர்மா 12 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அவர்களை தொடர்ந்து சூர்யகுமார் யாதவ் (12), துருவ் ஜுரெல் (4) மற்றும் ஹர்த்திக் பாண்டியா (7) என சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுமுனையில் திலக் வர்மா பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றியை நோக்கி பயணிக்க வைத்தார். அவருக்கு சிறிது நேரம் ஒத்துழைப்பு வழங்கிய வாஷிங்டன் சுந்தர் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்களில் அக்சர் பட்டேல் (2), அர்ஷ்தீப் சிங் (6) விரைவில் ஆட்டமிழக்க ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக்கொண்டது. இதனிடையே திலக் வர்மா அரைச்சதத்தை கடந்தார்.



இந்திய அணி வெற்றி பெற கடைசி ஓவரில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஜேமி ஓவர்டான் வீசிய அந்த ஓவரில் முதல் 2 பந்துகளிலேயே 6 ஓட்டங்கள் அடித்து இந்தியா வெற்றி பெற்றது. 19. 2 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 166 ஓட்டங்கள் அடித்து 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திய வெற்றி பெற்றது. திலக் வர்மா அதிரடியாக விளையாடி 72 ஓட்டங்கள் அடித்த நிலையில் ஆட்டமிழக்காமல் அணிக்கு வெற்றியை பெற்றுக்கொடுத்தார். இங்கிலாந்து தரப்பில் பிரைடன் கார்ஸ் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் இந்தியா 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் 2 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. (எ)

# ஆஸி ஓபன் ரென்னிஸில் சம்பியனானார் மேடிசன்



மெல்பேர்ன்,ஜன.27

நடப்பு அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் அமெரிக்காவின் மேடிசன் கீஸ் சம்பியனானார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இரு முறை சம்பியனான அரினா சபலென்காவை வீழ்த்தி மேடிசன் கீஸ் பட்டம் வென்றார்.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான ஆஸி ஓபன் ரென்னிஸ் தொடர் மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் முதல் நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலெங்கா,19ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் மேடிசன் கீஸுடன் மோதினார்.

இதில் மேடிசன் கீஸ் 6-3, 2-6, 7-5 என்ற செட்களில் அரினா சபலெங்காவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். இது இவரது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். கடைசியாக அவர், 2017ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடரில் இறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்தார்.

அவுஸ்திரேலிய ஓபனில் கடந்த 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் அரினா சபலெங்கா சம்பியன் பட்டம் வென்றிருந்தார். (எ)

# டெஸ்ட் கிரிக்கெட்டில் நோமன் அலி சாதனை

முல்தான், ஜன.27

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பாகிஸ்தான் தரப்பில் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்திய முதல் சுழற்பந்து வீச்சாளர் என்ற மாபெரும் சாதனையை நோமன் அலி படைத்துள்ளார்.

பாகிஸ்தான் - மேற்கு இந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 163 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக குடகேஷ் மோட்டி 55 ஓட்டங்கள் அடித்தார். பாகிஸ்தான் தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் நோமன் அலி ஹட்ரிக் உட்பட 6 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் முதல் நாள் முடிவிலேயே 154 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அந்த அணியில் அதிகபட்சமாக முகமது ரிஸ்வான் 49 ஓட்டங்கள் அடித்தார். மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் வாரிக்கன் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதனால் மேற்கு இந்திய தீவுகள் அணி 9 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நிலையில் நேற்று இரண்டாவது நாளில் 2ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 206 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்கள் இழந்த நிலையில் துடுப்பெடுத்தாடி வருகிறது.

முன்னதாக இந்த ஆட்டத்தில் மேற்கு இந்திய தீவுகள் அணியின் முதல் இன்னிங்ஸின்போது 12ஆவது ஓவரை பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் நோமன் அலி வீசினார். அந்த ஓவரின் முதல் 3 பந்துகளில் ஜஸ்டின் கிரேவ்ஸ், டெவின் இம்லாச் மற்றும் கெவின் சின்கிளேர் ஆகியோரின் விக்கெட்களை வரிசையாக வீழ்த்தி ஹட்ரிக் சாதனை படைத்தார்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பாகிஸ்தான் தரப்பில் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்திய முதல் சுழற்பந்து வீச்சாளர் என்ற மாபெரும் சாதனையை நோமன் அலி படைத்துள்ளார். (எ)

# ஐ.சி.சி. டெஸ்ட் அணியில் இடம்பிடித்தார் கமிந்து




டுபாய், ஜன.27

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) அறிவித்த 2024 ஆம் ஆண்டுக்கான டெஸ்ட் அணியில் இலங்கை அணி வீரர் கமிந்து மெண்டிஸ் இடம்பெற்றுள்ளார்.

இந்த அணியில் கமிந்து மெண்டிஸ் 6ஆவது இடத்தில் உள்ளார். டெஸ்ட் அணியின் தலைவராக அவுஸ்திரேலிய அணித் தலைவர் பட் கம்மின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

2023 - 2025 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் கமிந்து மெண்டிஸ் இதுவரை அதிக துடுப்பாட்ட சராசரியைக் கொண்டுள்ளார். அவர் 94. 30 என்ற துடுப்பாட்ட சராசரியைக் கொண்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான ஐ. சி. சி. ஆண்கள் டெஸ்ட் அணி வருமாறு, யஷஸ்வி ஜெய்ஸ்வால், பென் டக்கெட், கேன் வில்லியம்சன், ஜோ ரூட், ஹெரி புரூக், கமிந்து மெண்டிஸ், ஜேமி ஸ்மித் (விக்கெட் காப்பாளர்), ரவீந்திர ஜடேஜா, பட் கம்மின்ஸ் (தலைவர்), மெட் ஹென்றி, ஜஸ்பிரீத் பும்ரா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (எ)

# இலங்கைக்கு வந்தது அவுஸ்திரேலிய அணி

கொழும்பு, ஜன.27

"வோர்ன் - முரளி" டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு வருகை தந்தது.

டுபாயில் நடந்த பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அவுஸ்திரேலிய வீரர்கள் அங்கிலிருந்து இலங்கை வந்தனர்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் கீழ் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதன் முதல் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த டெஸ்ட் தொடருக்கு மேலதிகமாக, அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு எதிராக இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளது.

குறித்த போட்டிகள் பெப்ரவரி 12 மற்றும் 14 ஆகிய திகதிகளில் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளது. (எ)

# "வோர்ன் - முரளி" டெஸ்ட் இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு,ஜன.27

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட "வோர்ன் - முரளி" டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணி அறி விக்கப்பட்டுள்ளது.

இரு நாடுக ளுக்கும் இடை யிலான முதல் டெஸ்ட் போட்டி இம்மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.




இதில் பங்கேற்கும் இலங்கை டெஸ்ட் குழாம் வருமாறு, தனஞ்சய டி சில்வா (அணித் தலைவர்), திமுத் கருணாரத்ன, பெதும் நிஸ்ஸங்க (உடற்த குதியை பொறுத்து), ஓஷத பெர்னாண்டோ, லஹிரு உதார, தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ், கமிந்து மெண் டிஸ், குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்கிரம, சோனால் தினுஷ, பிரபாத் ஜெயசூர்ய, ஜெப்ரி வன்டர்சே, நிஷான் பீரிஸ், அசித பெர்னாண்டோ, விஷ்வ பெர்னாண்டோ, லஹிரு குமார, மிலான் ரத்நாயக்க ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (எ)

# தந்தை சாதனையை முறியடித்தார் மகன்

லண்டன்,ஜன.27

இங்கிலாந்தில் நடைபெற்ற உள்ளூர் போட்டி ஒன்றில் இங்கிலாந்து லயன்ஸ் அணியும், அவுஸ்திரேலிய லெவன் அணியும் மோதின. முதலில் விளையாடிய அவுஸ்திரேலிய லெவன் அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 214 ஓட்டங்களை பெற்றது.

அடுத்து விளையாடிய இங்கிலாந்து லயன்ஸ் அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 316 ஓட்டங்கள் பெற்றது. அந்த அணியின் ராக்கி பிளின்டாப் நிதானமாக விளையாடி சதமடித்தார்.

ராக்கி பிளின்டாப் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் அன்ட்ரூ பிளின்டாப்பின் மகன் ஆவார். இந்த நிலையில், ராக்கி பிளின்டாப் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்காக முதல் சதம் அடித்த இளைய வீரர் என்ற பெருமையை பெற்றார்.

அன்ட்ரூ பிளின்டாப் 20 வயது மற்றும் 28 நாட்களில் சதமடித்திருந்தார். அதை 16 வயது 291 நாட்களில் கடந்து சாதனை படைத்துள்ளார் ராக்கி பிளின்டாப். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமந்தையில்...

இருந்த பயணிகளை கொழும்பிலி ருந்து யாழ். நோக்கி வந்த ரயிலில் ஏற்றி மீண்டும் அவர்களைக் கொழும்பு நோக் கிக் கொண்டு செல்வதற்கு ஏற்பாடுகளை ரயில் திணைக்களம் மேற்கொண் டிருந்தது.

கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த பயணிகளை பஸ்களில் செல்லுமா றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## யோஷித...

அதிவேக நெடுஞ்சாலை சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் என்றும், அதை யோஷித ராஜபக்ஷவின் நண்பர் அல்லது வேறு நபரொருவர் எடுத்திருக்கலாம் எனவும் குறிப்பிட் டார்.

கைது செய்யப்படும் ஒவ்வொரு சந்தேக நபருக்கும் கைவிலங்கு போட வேண்டிய அவசியமில்லை என்றும், சந்தேக நபரின் நடத்தையைப் பொறுத்து, அந்த நேரத்தில் பணியில் இருக்கும் பொலிஸ் அதிகாரியே சந்தேக நபருக்கு கைவிலங்கு போடலாமா வேண்டாமா என்பதை தீர்மானிப்பார் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

அதன்படி, பொலிஸ் அதிகாரிகள் உரிய நேரத்தில் சரியான சட்ட நடவடிக் கைகளை எடுத்துள்ளதாகவும், எந்த விதத் திலும் அரசியல் அதிகாரத்தின் தலையீடு இல்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச் சாளர் புத்திக மனதுங்க மேலும் கூறி னார். (அ)

## யாழ்.பல்கலை...

இவர்களின் கோரிக்கை களில், விதி களை மீறி மேற்கொள்ளப்பட்ட விசார ணைகளை நிறுத்துதல், கருத்து வெளிப் பாடு மற்றும் போராட்ட உரிமைகளை உறுதி செய்தல், விரிவுரையாளர்களின் முறை கேடுகளை பாரபட்சமின்றி விசா ரணை செய்தல், மற்றும் கல்வி சுதந்தி ரத்திற் கான உடனடி நிவாரணம் வழங்கு தல் அடங்கும்.

குற்றமற்ற மாணவர்கள் மீது தண் டனைகள் விதிக்கப்பட்டதன் எதிர்ப் பாகவும், நிர்வாகத்தின் தவறுகளுக்கு நீதியான நடவடிக்கை எடுக்க வலியு றுத்தியும் இந்தப் போராட்டம் இடம் பெற்றது.

இதனை அடுத்து கலைப்பீட பீடா திபதி பேராசிரியர் சி.ரகுராம் அவரது பதவியை இராஜினாமா செய்துள்ளார். (அ)

## தமிழ்த்...

பொன்னம்பலம், இலங்கைத் தமி ழரசுக்கட்சியின் பாராளுமன்ற குழுத்த லைவர் சிவஞானம் சிறிதரன் மற்றும் ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்கு இடை யில் அண்மையில் நாடாளுமன்ற கட்ட டத்தொகுதியில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்தக் கூட்டத்துக்கான இணக் கப்பாடு எட்டப்பட்டது.

இதன்படி, யாழ்ப்பாணத்தில் இன்று மாலை 4 மணியளவில் இந்த சந்திப்பை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.

இந்த சந்திப்புக்கான அழைப்புக் கடிதம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவர் மற்றும் பொதுச் செயலா ளர் ஆகியோரால் நேற்றைய தினம் இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி பங்கேற்பதற் குக் கால அவகாசம் கோரிய நிலையில் திகதி தீர்மானிக்கப்படாமல் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பாராளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார். (அ)

# போலியாக கைது செய்து மறியலில் வைத்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோம்!

## உதய கம்மன்பில அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 27

போலியாக கைது செய்து, விளக்க மறியலில் வைத்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோம். ஆகவே செய்வதை முறையாக செய்யுங்கள் என்று அரசாங்கத்திடமும் அமைச்சர் ஆனந்த விஜேபாலவிடமும் குறிப்பிட் டுக்கொள்கிறோம். சட்டத்தின் பிரகாரம் கைதுகள் இடம்பெறவில்லை என முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிசக் கட்சி காரியா லயத்தில் பங்காளிக் கட்சி தலைவர்களு டன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கையில் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது- 2015 நல்லாட்சி அரசாங்கமும் அரசியல் பழிவாங்கலை முன்னிலைப் படுத்தி செயற்பட்டது. அக்காலகட்டத் தில் மகிந்த ராஜபக்ஷவின் இளைய புதல் வர் யோஷித ராஜபக்ஷ இரண்டாவதாக கைது செய்யப்பட்டு, 40 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். அவருக்கு எதிராக இன்று வரை வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

அதேபோல் நல்லாட்சி அரசாங்கத் தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கைது செய்யப்பட்டு, 92 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப் பட்டார். அவருக்கு எதிராக இன்று வரை வழக்குத் தாக்கல் செய்யப்பட வில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் எதிர்ப்பு குழுவின் செயலாளராக பதவி வகித்த ஆனந்த விஜேபால இந்த அரசாங் கத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கிறார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தற்போதைய அரசி யல் கைதுகளுக்கு தலைமை தாங்குகி றார். நல்லாட்சி அரசாங்கத்தில் செயற் பாடுகள் தான் தற்போது இடம்பெறு கிறது.

கைது செய்யப்பட்டு, விளக்கமறிய லில் வைக்கப்பட்டதன் பின்னர் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. நாங்கள் இம்முறை இதற்கு இடமளிக்கப் போவ தில்லை.

போலியாக கைது செய்து, விளக்க மறியலில் வைத்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோம். ஆகவே செய்வதை முறையாக செய்யுங்கள் என்று அரசாங்கத்திடமும், அமைச்சர் ஆனந்த விஜேபாலவிடமும் குறிப்பிட் டுக்கொள்கிறோம்.

கைது செய்யப்படுவதை ஆரம் பத்திலேயே அறிவோம். இருப்பினும் அதனை வெளிப்படுத்தவில்லை என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, தற்போதைய கைதுகள் சட்டத்தின் பிரகாரம் இடம்பெறுவ தில்லை. அரசியல் காரணிகளை அடிப் படையாகக் கொண்டது என்பது வெளிப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கவில்லை. ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் வாய்ச்சொல் வீரர்களாகவே செயற்படுகிறார்கள்.

அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாக குறைவடைந்துள் ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்தின் நிலையை அறிந்து கொள்ளலாம். பொய் மற்றும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப் படுத்தி அதிகாரத்தை கைப்பற்றலாம்.

இருப்பினும் அது நிலையற்றதாகும் என்பதற்கு ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கம் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும் - என்றார். (அ)

## எதிர்வரும்...

முல்லைத்தீவு மாவட்ட சங்கத்தின் நிர்வாகத் தெரிவின் பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங் கத்தினரின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று இடம்பெற்றது.

## யாழ்...

நிகழ்வொன்றில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. எனி னும் இதற்கான உறுதிப்படுத்தல்கள் இன்னமும் செய்யப்படவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார பாராளுமன் றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்ன தாக கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத் துக்கு விஜயம் செய்திருந்தார்.

இந்நிலையில், தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்ததன் பின்னர் ஜனாதிபதி அநுரகுமாரவின் முதல் யாழ் விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்தியா...

மற்றும் முனைப்புடமை ஆகியவற்றை யும் பகிர்ந்துகொள்கின்றோம்.

நாங்கள் நாகரிகம் மிக்க சகாக்கள். எங்கள் வரலாறு, மொழி, மதம், நெறி முறைகளை தொடர்ந்தும் பகிர்ந்து கொள்கின்றோம்.

நமது கதைகள் பின்னிப்பிணைந் துள்ளன. எங்களின் எதிர்காலம் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டது.

எங்கள் புவியியல் ரீதியிலான நெருக் கம் எங்களை இயற்கையான பங்காளி களாக மாற்றியுள்ளது. அதேவேளை அருகில் இருப்பதால் இரு நாடுகளும் பரஸ்பரம் ஏனைய நாட்டின் நலன்கள் குறித்த உணர்வை கொண்டிருப்பது அவசியமாகிறது.

மேலும், ஒப்பிட முடியாத தன்னிச் சையுடன் மூன்றாம் தரப்பின் அழுத்தங் களால் பாதிக்கப்படாமல் நாம் ஒருவரை யொருவர் ஆதரிக்கவேண்டும்.

இந்தியா இலங்கையின் நம்பகமான சகா என்பதை இலங்கையின் நம்பகத் தன்மை மிக்க நண்பர் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது. இயற்கை பேரிடர்களாக இருக்கலாம், கடலில் ஏற்படும் விபத்துக்களாக இருக்கலாம், கொவிட் பெருந்தொற்றாக இருக்கலாம் அல்லது சமீபத்தைய பொருளாதார நெருக்கடியாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும், இந்தியா முதலாவது நாடாக இலங்கைக்கு உதவ விரைந்து முன்வந்துள்ளது.

எங்கள் ஆதரவு உரிய தருணத்தில் விரைவானதாக நிபந்தனையற்றதாக காணப்பட்டுள்ளது - என்றார். (அ)

# மன உளைச்சலுக்கு உள்ளான பெண் தனக்கு தானே தீ மூட்டி உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணத்தில், மன உளைச்ச லுக்கு உள்ளான வயோதிபப் பெண் ணொருவர் நேற்றிரவு தவறான முடி வெடுத்து தனக்கு தானே தீ வைத்து உயிர்மாய்த்துள்ளார். சுன்னாகம் கிழக்கு, குமாரசுவாமி புலவர் வீதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு மங்களநாயகி (வயது 80) என்ற வயோதிப பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் பிள்ளைகள் வேலைகளுக்கு செல்வதனால் அவர் பெரும்பாலான நேரங்களில் தனிமையில் இருந்துள்ளார். இதனால் மன உளைச்ச லுக்கு உள்ளாகிய நிலையில் நேற்றிரவு வீட்டுக்கு அருகேயுள்ள வாழைத் தோட்டத்திற்கு சென்று, மண்ணெண் ணெயை தன் மீது ஊற்றி தீ மூட்டி உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசா ரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சுன்னாகம் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-05)

# காலி சிறைக்குள் மோதல் கைதிகள் நால்வர் காயம்

கொழும்பு, ஜன. 27

காலி சிறைச்சாலையில் இரு குழுக்க ளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் சம்பவத்தில் கைதிகள் நால்வர் காயம டைந்துள்ளதாக சிறைச்சாலைகள் ஊட கப் பேச்சாளர் காமினி பி.திசாநாயக்க தெரிவித்தார்.

இந்நிலையில், காயமடைந்த 4 பேரும் சிகிச்சைக்காக காலி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸ் விசேட அதிரடிப் படையின ரும் பொலிஸாரும் தற்போது வரவழைக் கப்பட்டனர். (அ)

## கடந்தகால...

குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவ தாக உறுதியளித்தார்.

இந்த விசாரணைகள் அனைத்தும் அரசியல் நலன்களின் அடிப்படையில் நடத்தப்படுவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், குற்றவியல் மற்றும் நிதி குற்றங்கள் தொடர்பான அனைத்து விசா ரணைகளும் எந்த அரசியல் தலையீடும் இல்லாமல் நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசு...

பெறுவோரின் சம்பள முரண்பாடுகளை மூன்று வருடங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பான முன் மொழிவுகள் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

## 2 ஜனாதிபதி...

அறிக்கைகளைக் கோரியுள்ளது.

ஹோமாகமவில் இடம்பெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில், கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகை இராஜதந்திர சந்திப்புகளுக்குப் பயன்படுத்தப்படும் என்றும், கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகை பெரஹரா சடங்குகளுக்கு பயன்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# தேர்தல் வழக்குகளுக்காக தனி நீதிமன்ற கட்டமைப்பு

## தேர்தல் ஆணையாளர் நாயகம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 27

**தேர்தல் தொடர்பான வழக்குகளுக்காக தனியான நீதிமன்றக் கட்டமைப்பை கோரியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவிக்கிறார்.**

வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை இதன்மூலம் இலகுபடுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரம் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இல்லை என அவர் கூறினார்.

தொழில் திணைக்களம், வனப் பாதுகாப்பு திணைக்களம் போன்றவற்றுக்கு இருப்பதைப் போல தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் வழக்குத் தாக்க செய்யும் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க வலியுறுத்தினார்.

தேர்தலொன்றின் போது இழைக்கப்படும் குற்றம் தொடர்பாக அடுத்த தேர்தலுக்கு முன்னரேனும் தண்டனை வழங்கப்படாத பட்சத்தில் மக்கள் நம்பிக்கை இழப்பர் என அவர் சுட்டிக் காட்டினார்.

இதன் காரணமாக தொழில் நீதிமன்றத்தைப் போன்று நீதிமன்ற கட்டமைப்பிற்குள் தேர்தல் வழக்குகளை கையாள்வதற்கான பிரத்தியேக இடம் வழங்கப்படுமாயின் சிக்கல்களை தீர்க்க முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார். (அ)




# 33 தமிழக மீனவர் ஒரே நாளில் கைது!

மன்னார், ஜன. 27

தலைமன்னாருக்கு வடக்காக உள்ள கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 33 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த மீனவர்களுடைய 3 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கை கடற்படையினர் நேற்று அதிகாலை முன்னெடுத்த வழமையான கண்காணிப்பு நடவடிக்கையின் போது, குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களும், படகுகளும் இரணைதீவுக்கு கொண்டு வரப்பட்டதுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி கடற்றொழில் உதவி பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# யாழ்.பல்கலை பொன்விழா நிகழ்வுகள் ஏப்ரல் மாதம் 26,27,28 ஆம் திகதிகளில்!

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு பூர்த்தியைத் தொடர்ந்து பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26 ஆம், 27ஆம், 28 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் இம்மானுவேல் ஆனோல்ட் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைபீடத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து பொன் விழா நிகழ்வை நடத்த தீர்மானித்துள்ளனர்.

இதற்காக உருவாக்கப்பட்ட ஏற்பாட்டுக் குழுவின் ஊடக சந்திப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. (அ)

# கசூரினா கடலில் விசப்பாசி! 6 பேர் வைத்தியசாலையில்!!

யாழ்ப்பாணம், ஜன. 27

காரைநகர் - காசூரினா கடலில் நீராடிய அறுவர் விசப்பாசி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் காரைநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கசூரினா சுற்றுலா மையமானது காரைநகர் பிரதேச சபையின் ஆளுகைக்குள் காணப்படுவதால் இது குறித்து காரைநகர் பிரதேச சபையின் செயலாளரை தொடர்பு கொண்டு வினவியவேளை, நேற்று விசப்பாசி தாக்கி ஆறு பேர் காரைநகர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக எனக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் நான் காரைநகர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிக்கு இது குறித்து தெரியப்படுத்தினேன். அந்தவகையில் விசப்பாசியை ஒழிப்பதற்கு வினாகிரி வாங்கி தருமாறு கோரிய நிலையில் நான் அதனை வாங்கிக் கொடுத்தேன்.

கடந்த நாட்களில் இவ்வாறான தாக்கம் எவையும் இடம்பெறவில்லை. திடீரென இன்றைய தினமே (நேற்று) இந்த விசப்பாசி தாக்கம் இடம்பெற்றுள்ளது- என்றார். (அ-05)

# புதிய அரசு பதவியேற்கும் வரை முக்கியமான கோப்பை மறைத்து வைத்த சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி

## ஜனாதிபதி அநுரகுமார பாராட்டு

கொழும்பு, ஜன. 27

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரியொருவர் முக்கியமான கோப்பு ஒன்றினை புதிய அரசாங்கம் பதவியேற்கும் வரை மறைத்துவைத்திருந்தார் என தெரிவித்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அந்த அதிகாரியை பாராட்டியுள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் தலையீட்டைத் தவிர்ப்பதற்காகவே அந்த அதிகாரி குறிப்பிட்ட கோப்பைச் சமர்ப்பிக்காமல் வைத்திருந்தார் என ஜனாதிபதி தெரிவித்தார்.

அவ்வேளை, அந்த வழக்கை தாக்கல் செய்திருந்தால் அந்த பெண் அதிகாரியை பதவியிலிருந்து நீக்கியிருப்பார்கள் அல்லது அந்த வழக்கை குழப்பியிருப்பார்கள் என தெரிவித்துள்ள ஜனாதிபதி, இதன் காரணமாக புதிய அரசாங்கம் பதவியேற்கும்வரை அந்த அதிகாரி அந்த முக்கிய கோப்பை சமர்ப்பிக்காமல் வைத்திருந்தார் என குறிப்பிட்டார்.

தனிப்பட்ட ஆபத்தினையும் பொருட்படுத்தாமல் அவ்வாறு செயற்பட்ட அதிகாரியை ஜனாதிபதி பாராட்டினார். (அ)

# ரில்வின் சில்வா சீனா செல்கிறார்



கொழும்பு, ஜன. 27

சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக் கும் (ஜே.வி.பி) இடையிலான உத்தேச இருதரப்பு அரசியல் ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற் காக மக்கள் விடுதலை முன்ன ணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

இந்த விஜயத்திற்கான திகதி இன்னும் முடிவாகாத நிலையில் பெரும்பாலும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் இந்த விஜயம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சீன விஜயத்தின்போது 15 ஒப்பந்தங்கள் வரை கைச்சாத்திடப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் யாவும் இரு நாடுகளுக்கு இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விடயங்களாகும்.

எனினும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று குறித்தும் இந்த விஜயத்தின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் அரசியல் ரீதியிலான பரிமாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்புகள் உள்ளடங்கலாக இரு கட்சிகளுக்கும் இடையில் பரஸ்பர ஒத்துழைப்புகளை விரிவுப்படுத்தும் வகையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரோஹிங்கியா முஸ்லிம் மக்களை இலங்கை பாதுகாப்பாக நடத்தும்!

## ஐக்கிய நாடுகள் சபை நம்பிக்கை

கொழும்பு, ஜன. 27

ரோஹிங்கியா முஸ்லிம் மக்களை இலங்கை பாதுகாப்புடன் நடத்தும் என்று நம்புகின்றோம் என ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அண்ட்ரே ப்ரான்ச் தெரிவித்தார்.

அகதிகளாக வந்துள்ள ரோஹிங்கியா முஸ்லிம் மக்களை இலங்கை பாதுகாப்புடன் நடத்தும் என்று நம்புகிறோம். ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தொடர்பான முக்கியஸ்தர்கள் குழு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அண்ட்ரே ப்ரான்ச் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமசந்திர ஆகியோருக்கும் இடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது ரோஹிங்கியா முஸ்லிம் மக்களை இலங்கை பாதுகாக்கும் விதம் குறித்து வதிவிட ஒருங்கிணைப்பாளர் பாராட்டுக்களை தெரிவித்தார்.

அந்த மக்களை மீண்டும் மியன்மாருக்கு அனுப்பாமல் பாதுகாப்பான ஒரு நாட்டில் தங்க வைப்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபை அவதானம் செலுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதுவரை ரோஹிங்கியா முஸ்லிம் மக்களை இலங்கை பாதுகாப்புடன் நடத்தும் என்று நம்புகின்றோம். ரோஹிங்கியா முஸ்லிம் மக்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் அறிவிப்பு பாராட்டுக்குரியது. இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தொடர்பான முக்கியஸ்தர்கள் குழு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த டிசம்பர் 19ஆம் திகதி கரை ஒதுங்கிய சுமார் 35 சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய் உட்பட 100 இற்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகளை அந்தப் பகுதியைச் சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மீனவர்கள் உணவு, குடிதண்ணீர் உள்ளிட்டவற்றை வழங்கி மீட்டு கரைக்குக் கொண்டுவந்திருந்தனர். அவர்கள் தற்போது முல்லைத்தீவு விமானப்படை முகாமில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org